| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை - 600 006. | 1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண். 017225 / எச்1 /2025** **நாள் : 09.12.2025**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – 2025-2026 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – +1 Arrear மாணவர்களது பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் தேர்வுக் கட்டணம் / TML கட்டணம் ஆன்-லைன் வழியாக செலுத்துதல் – சார்பு.

**பார்வை :**
1. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்: 21.09.2007.
2. அரசாணை (நிலை) எண்.68, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, நாள்:18.11.2021.
3. அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.11.04.2002.

*****

2025-2026- ஆம் கல்வியாண்டிற்கான +1 Arrear தேர்வெழுதவுள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்யவும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மற்றும் +1 Arrear தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்று, அத்தொகையினை https://dgeapp.tnschools.gov.in என்ற

இணையதளத்திற்குச் சென்று அனைத்து தேர்வர்களையும் தெரிவு செய்து செலுத்த வேண்டிய மொத்த கட்டணத் தொகையினை ஆன்லைன் வாயிலாக 10.12 .2025 அன்று பிற்பகல் முதல் 19.12.2025 வரையிலான நாட்களில் செலுத்தவேண்டும் என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்வுக் கட்டணம் (Exam Fees)**

| வ. எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|
| 1 | செய்முறை கொண்ட பாடங்கள் அடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.225/- |
| 2 | செய்முறை இல்லாத பாடங்கள் அடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.175/- |

**தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:**

I. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

II. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

அ) SC/SCA/ST மற்றும் SC Converts (SS)
ஆ) MBC/DC
— பெற்றோருக்கான வருமானத்திற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை.

இ) BC/BCM - பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு) மிகாமல் இருப்பவர்களுக்கு மட்டும்

III. அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் பார்வை குறைபாடுடைய மற்றும் செவித்திறன் / பேச்சுத்திறன் குறைபாடுடைய மாணவர்கள்.

**<u>சுயநிதி / மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ – இந்தியப் பள்ளிகள்:</u>**

சுயநிதி/மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டண விலக்கு வழங்கப்படுவதில்லை.

**<u>+1 Arrear தேர்வெழுதுவதற்கான கட்டணம்</u>**

ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- மற்றும் இதரக் கட்டணம் ரூ. 35/-

(உ-ம்) ஒரு பாடம் ரூ.50 + 35 = 85/-

இரு பாடங்கள் = 135/- (ரூ.100 + 35 = 135)

**+1 Arrear தேர்வெழுதும் மாணவர்களுக்கு தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து எவ்வித விலக்கும் இல்லை.**

**<u>அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் கட்டணம் (TML Fees)</u>**

பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி 2025-2026- ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) ரூ.300/- செலுத்தவேண்டும்.

ஆன்-லைன் மூலமாக கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக ஒருங்கிணைப்பாளரை (Co-ordinators) தொடர்பு கொள்ளலாம்.

மேற்படி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும், 2025-2026 - ஆம் கல்வியாண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் (Exam Fees), +1 Arrear

தேர்விற்கான தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் (TML Fees) ஆகியவற்றினை ஆன்-லைன் வழியாக செலுத்திட அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-

இயக்குநர்

நகல் :

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
மாநில திட்ட இயக்ககம், சென்னை-6.

2. உறுப்பினர் செயலர், அரசு மாதிரிப் பள்ளிகள், சென்னை-6.

3. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-6.

4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.

5. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்)

6. அ3 பிரிவு (அலுவலகம்) – தொடர் நடவடிக்கைக்காக.